# தமிழ் இலக்கண நூல்களில் பாடுபொருள் மாற்றம்

**By**

**ஹெப்ஸி ரோஸ் மேரி, அ.**

*உதவிப்பேராசிரியர், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், காரியவட்டம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*காலந்தோறும் தமிழ்மொழியில் பல இலக்கண நூல்கள் தோன்றின. ஐரோப்பியத் தமிழ் அறிஞர்களின் தொடர்பினாலும், மொழியியல் கோட்பாடுகளின் வளர்ச்சியினாலும் தமிழ் இலக்கண மரபில் பெரிய வளர்ச்சிகளும் முன்னேறங்களும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு தோன்றிய இலக்கண நூல்கள் அவ்வவ் கால வழக்குகளுக்கு இலக்கணம் அமைத்தன. ஒவ்வொரு இலக்கண நூல்களும் தமக்கென ஒவ்வொரு பாடுபொருளை மையமாகக் கொண்டு அமைந்தன. இக்கட்டுரை தமிழ் இலக்கண நூல்களின் பாடுபொருளை எடுத்துரைக்கிறது. தொடர்ந்து வேற்றுமை இலக்கணம் வரையறுப்பதில் இலக்கண நூல்களுள் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றத்தை ஆராய்வதாக அமைகிறது.*

***கலைச்சொற்கள்:*** *வேற்றுமை, சொல்லுருபு, தகவு, நேர்ச்சி.*

## முன்னுரை

இலக்கணங்கள் தமிழ் மொழிக்குப் புதியன அல்ல. தொல்காப்பியம் முதல் அடிப்படைத் தமிழிலக்கணம் வரையிலான பல நூல்கள் காலம் தோறும் தமிழ்மொழியல் தோன்றிக் கொண்டேதான் இருக்கின்றன. ஐரோப்பியத் தமிழ் அறிஞர்களின் தொடர்பினாலும், மொழியியல் கோட்பாடுகளின் வளர்ச்சியினாலும் தமிழ் இலக்கண மரபில் பெரிய முன்னேற்றங்களும் வளர்ச்சிகளும் முன்னேறங்களும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ் மொழியில் பல இலக்கணங்கள் தோன்றுவதற்குக் காரணம் மொழியில் ஏற்பட்ட வளர்ச்சிநிலை ஆகும். ஒரு மொழியின் பழைய வழக்குகள் மறைதலும் புதிய வழக்குகள் தோன்றுதலும் மொழியமைப்பின் வளர்ச்சியைக் காட்டுகிறது. வளர்ந்து வரும் சமூகத்தில் அல்லது அறிவார்ந்த மக்கள் வழங்குகிற மொழியில் மொழியமைப்பிற்கேற்பப் பல புதுப்புது இலக்கணங்கள் தோன்றுவது இயல்பு. அவ்வாறு தோன்றிய இலக்கணங்களுள் பாடுபொருள் மாற்றத்தைக் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். விரிவஞ்சி முதல் இலக்கணமான தொல்காப்பியம், இடைக்கால இலக்கணமான நன்னூல் தற்கால இலக்கண நூலான அடிப்படைத் தமிழிலக்கணம் போன்ற நூற்கள் சுட்டும் வேற்றுமையில் ஏற்பட்ட மாற்றத்தை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## தமிழ் இலக்கண நூல்களின் பாடுபொருள்

பாடுபொருள் என்பது ஒரு நூலின் மையமாக் அல்லது கருவாக அமையும் பொருள் என்பதாகும். இலக்கியத்திற்கு இலக்கியம் எவ்வாறு பாடுபொருள் மாற்றம் பெறுகிறதோ அதேப் போலவே இலக்கண நூல்களுக்கிடையேயும் பாடுபொருள் மாற்றம் நிகழ்ந்துள்ளன. இம்மாற்றத்தை,

**‘கடி சொல் இல்லை காலத்துப் படினே (தொல் சொ 446)**

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையினானே (நன் 4662)**

எனத் தொல்காப்பியமும் நன்னூலும் வலியுறுத்துகின்றன.

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கும் முதல் இலக்கண நூல். இதில் எழுத்து, சொல், பொருள் போன்றவை பாடுபொருளாக காணப்படுகிறது. ஆனால் தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய ஒவ்வொரு இலக்கண நூல்களும் தொல்காப்பியர் ஒவ்வொரு இயல்களிலும் அமைத்த கருத்துக்களை மையமாகக் கொண்டும் பல புதிய கருத்துக்களை இணைத்தும் தனித்தனி நூல்களாக விளங்கின. தோல்காப்பியத்திற்கு அடுத்து தோன்றிய வீரசோழியம் ஐந்திலக்கணம் கூறும் முதல் நூலாகும். இதனைத் தொடர்ந்து வந்த இலக்கண விளக்கம், சுவாமிநாதம், முத்து வீரியம் போன்ற நூல்கள் ஐந்திலக்கிணத்தை எடுத்தியம்பின தொல்காப்பிய செய்யுளியலை அடியொற்றி சங்கயாப்பு, அவிநயம், காக்கைப் பாடினியம், யாப்பருங்கல், யாப்பருங்கலக் காரிகைப் போன்ற நூல்கள் தனி ஒரு இலக்கணமாக யாப்பு நூற்களாக வளர்ச்சியடைந்தன.

வடமொழிச்சார்பால் பிற்காலத்தில் அணியில க்கண நுல்களாக வளர்ச்சியடைந்தன தண்டிய லங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம், போன்றவை சிறந்த அணியிலக்கண நூல்களாகும். அகத்திணையியல் புறத்திணை யியல், என்பன தனித்தனியே பகுக்கப்படினும் இவற்றில் களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் என்பன தொடர்புடையனவாகத் திகழ்ந்தன. இவற்றை உட்கொண்டு பிற்காலத்தில் இறையனார் களவியலுரை நம்பியகப் பொருள் போன்ற அகப்பொருளிலக்கண நூல்கள் தோன்றின. புறப்பொருளைப் பாடுபொருளாகக் கொண்டு தோன்றின. புறப்பொருளைப் பாடுபொருளாகக் கொண்டு பன்னிரு படலம் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்கள் தோன்றின. வுடமொழிச் சார்பால் சொல்லிலக்கணத்தைப் பாடுபொருளாகக் கொண்டு பிரயோக விவேகம் போன்ற இலக்கண நூல்கள் வந்தன. இவ்வாறு எழுத்து, சொல், அகத்திணை, புறத்திணை, யாப்பு, அணி, போன்றவற்றைத் தனியாகப் பாடுபொருளாகக் கொண்ட பல இலக்கண நூலகள் தமிழ் மொழியில் தோன்றின. மட்டுமல்லாது ஐந்திலக்கண மரபு போய் புலமை இலக்கணத்தைக் கொண்டு தண்டபாணி சுவாமிகள் அறுவகை இலக்கணத்தைத் தோற்றுவித்தார். தமிழ் இலக்கண நூல்கள் அனைத்தும் ஒன்றோ ஒன்றிற்கு மேற்பட்ட பல பாடுபொருள்களைக் கொண்டே விளங்கின என்பது புலனாகும். அடிப்படைத் தமிழிலக்கணத்தில் எம். ஏ. நு.ஃ.மான் மொழியியல் நோக்கிலும், பல செய்திகளை எடுத்துக் கூறுவதோடு வாக்கிய அமைப்பினை தொடரியல் நோக்கோடு அணுகியுள்ளமையும் இலக்கணங்களில் ஏற்பட்ட பாடுபொருள் மாற்றத்தை வெளிப்படுத்துகின்றன. ஆரம்ப கால இலக்கணங்கள் நூற்பா, வெண்பா போன்ற பா வகைகளைக் கொண்டிலங்க தற்கால இலக்கணநூலான அடிப்படைத் தமிழ் இலக்கணம் உரைநடையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**வேற்றுமையில் பாடுபொருள் மாற்றம்**

தொல்காப்பியர்,

**வேற்றுமை தாமே ஏழெனெ மொழிப (தொல். சோல்.63)**
**விளிகொள் வதன்கண் விளியோடுட்டே (தொல். சொல்.64)**

ஏன வேற்றுமைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடகிறார். முதல் நூற்பாவில் பிற அறிஞர்களின் கருத்தினை எடுத்துக்கூறி பின் தம் கருத்தினை நிறுவுகிறார்.

**‘வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை’ (நன் 290)**

என நன்னூலார் எட்டு வேற்றுமையைக் குறிப்பிடுகிறார்.வேற்றுமை என்பது எழுவாய்க்கும் செயப்படுபொருளுக்கும், இடையேயான பொருளை வேறுபடுத்திக் காட்டுவதாகும். தமிழில் இவ்வேற்றுமையின் எண்ணிக்கையை நிறுவுவதில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. இலக்கணிகள் வேற்றுமையை எட்டு என்று கூற மொழியியலாளர்கள் மூன்றாம் வேற்றுமையை இரண்டாகப் பிரித்து ஒன்பது என்று கொள்வர். (2007:88) எம். ஏ நு.ஃமான் மொழியியலார் கருத்தை ஒட்டி வேற்றுமை ஒன்பது என்று நிறுவுகிறார். தொல்காப்பியரும் நன்னூலாரும் வேற்றுமையை எண்ணடிப்படையில் சுட்ட எம்.எ. நு.ஃமான் பொருளடிப்படையில் பெயர் சூட்டுகிறார். மேலும், இவர் சில வேற்றுமைகளுக்குச் மாற்றுருபுகளையும் சொல்லுருபுகளையும் சுட்டிக்காட்டுகிறார். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் இது காணப்படவில்லை. இது பிற்கால இலக்கணத்தில் நிகழ்ந்த பாடுபொருள் மாற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது எனலாம். பின்வரும் பட்டியல் இலக்கண நூல்கள் சுட்டும் வேற்றுமையையும் அதன் உருபுகளையும் சுட்டிக்காட்டுகிறது.

**இலக்கண நூல்கள் காட்டும் வேற்றுமை உருபுகள்**

| வரிசை எண் | தொ.கா வே/உ | நன் வே/உ | அ.த.இ வே/உ | மா.உ | சொ. உ |
|---|---|---|---|---|---|
| 1 | முதல். வே<br>உருபு இல்லை | முதல் வே<br>உருபு இல்லை | எழுவாய் வே<br>உருபு இல்லை | | |
| 2 | இரண். வே<br>ஐ | இரண். வே<br>ஐ | செயப்படு. வே<br>ஐ | | |
| 3 | 3-ஆம் வே<br>ஒடு | 3-ஆம் வே<br>ஆல், ஆன்,ஒடு | கருவி. வே<br>ஆல் | | |
| 4 | - | - | உடனிகழ்சி.வே<br>ஒடு | | உடன் |
| 5 | 4ஆம் வே.<br>கு | 4ஆம் வே<br>கு | கோடைபோவே<br>கு | -க்கு<br>அக்கு<br>உக்கு | |
| 6 | 5-ஆம் வே<br>இன் | 5-ஆம் வே<br>இன், இல் | நீங்க பொ வே<br>இல் | | இருந்த<br>இலிருந்து<br>இடமிருந்து |
| 7 | 6-ஆம் வே<br>அது | 6-ஆம் வே<br>அது, ஆது | ஊடைமை<br>பொ.வே<br>இன், அது | | உடைய |
| 8 | 7ஆம் வே<br>கண்,<br>கால்,புறம்,அகம்,<br>கீழ்,, மேல், பின்,<br>சார்,அயல், புடை,<br>முன், தேவகை, | 7ஆம் வே.<br>கண்,<br>கால்,கடை,<br>இடை,தலை,<br>வாய்,திசை, வயின்,<br>முன், சார்,வலம், | உடைமை வே<br>இன், அது,<br>உடைய, உள் | | இடம் |

| | | | |
|---|---|---|---|
| | இடை,கடை, தலை,வலம் இடம் | இடம்,மேல்,கீழ்,முதல், பின், புடை, பாடு,அளை, உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் | |
| 9 | விளி. வே | விளி.வே | விளி.வே |

இப்பட்டியலைப் பார்க்கும் போது வேற்றுமையின் உருபு கூறும் முறையில் பெரிய மாற்றம் நிகழவில்லை. எனினும் மாற்றுருபு, சொல்லுருபு கூறும் முறையில் மரபிலக்கணங்களில் இருந்து அடிப்படைத் தமிழிலக்கணம் மாறுபட்டு நிற்பதைக் காணலாம்.

### வேற்றுமை - பொருள்நிலை மாற்றம்

வேற்றுமையின் பொருள் நிலைகளைச் சுட்டுவதில் ஒவ்வொரு இலக்கணமும் முற்றிலும் மாறுபட்டு நிற்பதைக் காணலாம், முதல் விளி வேற்றுமைகளுக்கு இலக்கண நூல்கள் உருபும் பொருளும் சுட்டவில்லை அடிப்படை தமிழலக்கணம் விளிவேற்றுமையைத் தற்கால மொழியியலார் சிலர் வேற்றுமையகக் கொள்வதில்லை. (2007:109) என்ற கருத்தை எடுத்தியம்புகின்றது.

இரண்டாம் வேற்றுமையின் பொருள் நிலைகளாகத் தொல்காப்பியர் 28 பொருள் நிலைகளைச் சுட்டுகிறார். நன்னூலார் ஆக்கல், நீத்தல், அழித்தல், ஒத்தல், அடைதல், உடைமை என்ற ஏழு பொருள்நிலைகளைக் குறிப்பிடுகிறார். 'வீட்டைக் கட்டினான் (ஆக்கல்) வீட்டை இடித்தான் (அழித்தல்) இவ் எடுத்துக் காட்டுகளைப் பார்க்கும் போது இப்பொருள்கள் வினயையின் பொருளே அன்றி வேற்றுமையின் பொருள் அல்ல என்று கூறி இதன் பொருள் நிலையைக் குறிப்புடைப் பெயர், குறிப்பிலாப் பெயர் என்று விளக்குகிறார்.

நான்காம் வேறறுமையின் பொருள் நிலைகளாகத் தொல்காப்பியம், அதற்கு வினையுடைமை முதலாகச் சிறப்பு இறுதியாகப் பத்துப் பொருள்களைச் சுட்டுகிறார். நுன்னூலார் கொடை, அதுவாதல், பொருட்டு, நேர்ச்சி, பகை, முறை, தகவு என்ற ஏழினை விளக்குகிறார். எம்.ஏ. நு.ஃமான் பகை, நட்பு, முறை இம்மூன்றனையும், சேர்த்து உறவுப் பொருள் ஒன்றனுள் அடக்குவார். மேலும், தகுதிப்பொருள் (கற்றவர்களுக்கு அழகு அடக்கம்.) அதுவாதல் பொருள் (அக்கா சட்டைக்குத் துணி வாங்கினாள்) காரணப்பொருள் (அம்மா குழந்தைக்குப் பால் வாங்கினாள்) எல்லைப் பொருள் (வீட்டுக்கு முன்னால் மாமரம் நிற்கிறது) ஓர் இடம் நோக்கி நகர்தல் (தம்பி வீட்டுக்கு ஓடினான்) அனுபவப் பேறு (பிள்ளைக்குப் பசிக்கிறது) காலக் குறிப்பு (ஆசிரியர் மூன்று மணிக்கு வரச்சொன்னார்) வீதம் விகிதாசாரம் (நூற்றுக்கு எண்பது) வினையடை ஆக்கம் (வீட்டுக்கு வீடு) என்ற பத்து புதுப்பொருளைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு இலக்கண நூல்கள் சொல்லவந்த சிறு கூறுகளிலும் கூட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம்.

### முடிவுரை

தமிழ் மொழியில் தோன்றிய இலக்கண நூல்களிலும் காலம் தோறும் பாடுபொருளில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஒவ்வொரு கூறுகளிலும்

அதன் உட்கூறுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக இலக்கண நூல்களின் தரவு ஒன்றாக இருப்பினும் அதை விளக்கும் முறையிலும் அணுகும் முறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை ஓரளவு இக்கட்டுரை விளக்குகிறது. வேற்றுமை இலக்கணம் வரையறுப்பதில் அதாவது உருபைக் கூறும் முறையிலும் பொருள் நிலைகளை வரையறுக்கும் விதத்திலும் காலந்தோறும் இலக்கண நூல்களுக்கு இடையிலே மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. மொழியின் வளர்ச்சிக்கு ஏற்ப இலக்கணங்களிலும் பாடுபொருள் மாற்றம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## பார்வை நூல்கள்

சுப்பிரமணியன், ச. வே. இலக்கணத்தொகை – சொல் கேரளப்பல்கலைக் கழக வெளியீடு, திருவனந்தபுரம், 1971.

சேனாவரையர், உ. ஆ. தொல்காப்பியம் சொல், கழகவெளியீடு, சென்னை, 2001.

மயிலைநாதர், உ. ஆ. நன்னூல், உ.வெ.சா நூல்நிலையம், சென்னை, 1995.

நு.ஃமான், எம். ஏ. அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், திருச்சி, 2007.

## To cite this article

*****************

Hepsy Rose Mary, A. (2022). தமிழ் இலக்கண நூல்களில் பாடுபொருள் மாற்றம். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 5*(3), 33-37.

*************************************************************************************

## ABOUT THE AUTHOR



***Dr Hepsy Rose Mary, A.*** *working as an Assistant Professor and Head, Department of Tamil, University of Kerala, Kerala. She got a Ph.D in Kerala University on the Topic Veerachozhiyam and Neminatham A Comparative Study. She has published six books and seventy articles in various journals in that twenty articles are published in UGC Referred journals. She also participated and conducted so many national and international seminars. Last year, she conducted three batches of Refresher Courses for College and University teachers. She won Best faculty award and Aayvuchemmal award.*

*************************************************************************************